# கீழக்கரை நகராட்சி

கீழக்கரை நகராட்சியில் 30.11.2022 ஆம் தேதி புதன் கிழமை காலை 11.00 மணியளவில் **நகர்மன்ற தலைவர்** தலைமையில் நடைபெற்ற மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

**பொருள்: 1**

**I) கீழக்கரை நகர்மன்ற 1வது வார்டு உறுப்பினர் திரு. எஸ். முகம்மது பாதுஷா அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| வ.எண். | பணிகள் விபரம் |
|---|---|
| 1. | கீழக்கரை நகராட்சி 1-வது வார்டுக்குட்பட்ட அல்நூர் பெண்கள் தொழுகைப்பள்ளி பகுதியில் மழைக்காலங்களில் நீர் கட்டுகிறது. பள்ளப்பகுதியாக இருப்பதால் மழைநீர் வடிவதற்கு முகாந்திரம் இல்லாமல் உள்ளது. எனவே, அப்பகுதியில் மழைநீர் சேமிப்பு தொட்டி அமைத்து நிலத்தடிநீரை பாதுகாப்பதற்கு ஆவண செய்யுமாறு கேட்டல். |
| 2 | கீழக்கரை நகராட்சியில் வசூலிக்கப்படும் குடிநீர் கட்டணம் ஆண்டு ஒன்றுக்கு 1800/- வசூல் செய்யப்படுகிறது. ஆனால் மாநகராட்சியில் ஆண்டு ஒன்றுக்கு 1200/- வசூல் செய்யப்படுகிறது. மாநகராட்சி குடிநீர் கட்டணத்தைவிட நகராட்சி குடிநீர் கட்டணம் 600/- கூடுதலாக வசூல்செய்யப்படுகிறது. இதனால் மக்கள் கடுமையாக பாதிப்படைந்துள்ளார்கள். உடனடியாக தனிகவனம் செலுத்தி இந்த கட்டண உயர்வை ரத்து செய்து உரிய கட்டணம் வசூலிக்குமாறு கேட்டல். |
| | **1-வது வார்டு குழு மற்றும் வார்டு சபா கூட்டத்தில் பொதுமக்களின் கோரிக்கை** |
| 1. | சின்ன கிணறு இஸ்லாமியா தமிழ் மீடியம் எதிரில் சுத்தம் செய்து தர கோருதல். குப்பைகள் தினசரி சுத்தம் செய்து தர கோருதல். வாரத்திற்கு இருமுறை கொசு மருந்து அடிக்க வேண்டும். |
| 2. | ஜாமியா நகர் கால்வாய் அமைத்தல். குடிநீர் அமைத்தல். குடிநீர் பைப்லைன் அமைத்து தர வேண்டும். பால்பண்ணையில் போஸ்ட் லைட் அமைத்து தர கோருதல். குப்பை தொட்டி அமைத்துதர கோருதல். |
| 3 | தெற்குத் தெரு ஜமாத் பம்பிங் ஸ்டேசன் இடம் ஒதுக்கீடு செய்த இடத்தில், கழிவுநீர் செல்ல வழிவகை செய்ய வேண்டும் |
| 4 | புதுக்குடி என்பதை புதுத்தெரு ஆக மாற்றம் செய்து தரக் கோருதல். நகராட்சி தூய்மை பணியாளர்கள் மற்றும் பரப்புரையாளர்களுக்கு அடையாள அட்டை வழங்கவும். முன்அறிவிப்பு வழங்கவும். |
| 5 | வார்டு மறு வரையறை சரிசெய்து தரக் கோருதல். |
| 6 | கூள வீடு சந்து பகுதியில் பேவர் பிளாக் கல் அமைக்க கோருதல். |
| 7 | ஜாமியா நகர் அலிமாமா தர்ஹாவில் மின் விளக்கு அமைக்க கோருதல். |
| 8 | தார்கார்டன் பூங்காவில் சிறு குழந்தைகளுக்கு விளையாடுவதற்கு பொருட்கள் அமைத்து தர கோருதல். |
| 9 | நூர் பள்ளி பின்புறம், பேவர்பிளாக் கல் மற்றும் பைப்லைன் வசதி செய்து தரக் கோருதல். |

II) கீழக்கரை நகர்மன்ற 2-வது வார்டு உறுப்பினர் திருமதி. வே. ஜெயலெட்சுமி அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.

| வ.எண். | பணிகள் விபரம் |
|---|---|
| 1. | |
| | 2-வது வார்டு குழு மற்றும் வார்டு சபா கூட்டத்தில் பொதுமக்களின் கோரிக்கை |
| 1. | தட்டான்தோப்பு தெரு பகுதியில் பொதுகுழாய் மற்றும் மின்விசைப்பம்பு உடனடியாக செயல்பாட்டிற்கு கொண்டு வரவேண்டும். (மாரியம்மன் கோவில் முதல் கிளிமூக்கு சாமி கோயில் வரை) |
| 2. | தினசரி குப்பைகள் நீக்கம் செய்யப்பட வேண்டும். தூய்மை பணியாளர்கள் தினசரி வர வேண்டும் |
| 3 | தட்டான்தோப்பு மேற்கு பகுதியில் குடிநீர் வாட்டமாக செல்ல வழிவகை செய்ய வேண்டும். |
| 4 | ரேசன்கடை ஜங்ஷன் பாக்ஸ் மாற்றம் செய்ய வேண்டும். மாரியம்மன் கோவில் முதல் பம்பிங் ஸ்டேசன் வரை வாறுகால் பைப்லைன் சரி செய்து தர வேண்டும். |
| 5 | அம்பலம் காம்ப்ளக்ஸ் லைன் முன்புறம் வாறுகால், கால்வாய் சேதமடைந்து, மழைபெய்யும் நேரத்தில் வாறுகால் நிறைந்து காம்ப்ளக்ஸ் குடியிருப்பு பகுதியில் நுழைந்து சேறும் சகதியுமாக உள்ளது. இதனால் குடியிருப்போர்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது. இதனை சரிசெய்து தருமாறு கோருதல். |

III) கீழக்கரை நகர்மன்ற 3-வது வார்டு உறுப்பினர் திரு.வி.எஸ். ஹமீது சுல்தான் அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.

| | |
|---|---|
| | 3 வது வார்டு குழு மற்றும் வார்டு சபா கூட்டத்தில் பொதுமக்களின் கோரிக்கை |
| 1. | ஆடறுத்தான் தெரு பகுதியில் CTC எதிரில் EB Boll பழுதடைந்துள்ளது. அதனை அகற்றம் செய்து புதிதாக மின்கம்பம் அமைத்து தர கோருதல். வாறுகால்கள் மூன்று உறை தொட்டியினை சரி செய்து தருமாறு கோருதல். பொதுகுழாய்கள் சரி செய்து தருமாறு கோருதல். |
| 2. | பழைய மீன் கடை அருகில் பழைய மரம் பழுதடைந்துள்ளது. அதனை அகற்றுதல். கச்சு மரைக்கான் தெரு வில் மற்றும் ஆடறுத்தான் தெருவிலிருந்து கஜினி டீ கடை தெரு வரை பேவர்பிளாக கல் அமைத்து தருமாறு கோருதல். |
| 3 | தெற்கு வெள்ளாளர் தெரு, வேப்பமரத்தினை உடனடியாக நீக்கம் செய்து தர கோருதல். பொதுகுடிநீர் குழாய் அமைத்து தர கோருதல். |
| 4 | ஆடறுத்தான் தெரு பழைய பைப்புகள் மாற்றம் செய்து புதிதாக அமைத்து தர கோருதல் |
| 5 | ஆடறுத்தான் தெரு கிழக்குத் தெரு செல்லும் பகுதியில் கழிவு தண்ணீரை பாதையில் ஊற்றி அசுத்தம் செய்துள்ளது. சுத்தம் செய்து தரக் கோருதல். |
| 6 | கஜினி டீ கடை எதிர்பகுதி சந்து தொடக்க பகுதியில் மழைக்காலத்தில் அதிகளவில் தண்ணீர் தேங்கி பொதுமக்களுக்கும், பள்ளி மாணவர்களுக்கும் சிரமமாக உள்ளதால் அப்பகுதியை சரி செய்து தரக் கோருதல். |
| 7 | அதே பகுதியில் வலது கை முதல் சந்து மிக மோசமாக மேடு பள்ளமாக இருப்பதால் நடப்பவர்கள் இடறி கீழே நிலையும் உள்ளது. இந்த பகுதியில் கல் பதித்து மழை தண்ணீர் தேங்காமல் நடப்பவர்களுக்கு சிரமம் இல்லாமல் செய்து தரவும். |
| 8 | 7/4 போஸ்ட் லைட் எரியாததால் சரி செய்து தர கோருதல் மற்றும் போஸ்டை மாற்றவும் |
| 9 | பணியக்காரத் தெரு முதல் சந்து பாதை இருட்டாக உள்ளதால் பொதுமக்கள் நடந்து போக ஒரு லைட் போடவும். |
| 10 | 7/19 இரும்பு மின்கம்பம் கடந்த 50 வருடங்களாக மாற்றாமல் உள்ளது. |

| | |
|---|---|
| | மழைக்காலங்களில் மின்கசிவு ஏற்படுகிறது. மேலும், துருபிடித்து எப்பொழுது விழும் என்ற நிலையில் உள்ள மின்கம்பத்தை மாற்றி விபத்து ஏற்படும் முன் போஸ்டை மாற்றித் தரவும். |
| 11 | கச்சி மரைக்கார் தெருவில் ஏற்கெனவே உபயோகத்தில் இருந்த காவேரி நீர் பொதுக்குழாய்களை புதுப்பித்து மீண்டும் தண்ணீர் கிடைக்க வழிவகை செய்யவும். |
| 12 | வார்டு பகுதியில் எரியாமல் இருக்கும் தெருவிளக்குகளை சரி செய்து எரிய வைக்கவும். |
| 13 | பழைய மீன்கடை அருகில் மக்களுக்கு ஆபத்தை விளைவிக்க காத்திருக்கும் பட்டுப் போன மரத்தை நீக் வழிவகை செய்யவும். |
| 14 | ஆடறுத்தான் தெரு, 7/114A என்ற முகவரியில் வசிக்கும் லெப்பைத் தம்பி வீட்டின் அருகில் உள்ளவர்கள் கழிவுநீர் , மீன் கழிவு ஆகியவற்றை ஊற்றி கொசு மற்றும் நோய்கிருமிகளை உண்டாக்கக் கூடிய வகையில் செயல்கள் செய்வதால் சிறு குழந்தைகள் முதியோர்கள் நோய் தொற்றுக்கு ஆளாகும் வகையில் சுகாதார கேட்டை உண்டாக்கி கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்த இடத்தை சுத்தம் செய்து மருந்து தெளித்து சுகாதாரமாக நடமாட வழிவகை செய்ய கோருதல். |

**IV) கீழக்கரை நகர்மன்ற 4-வது வார்டு உறுப்பினர் திருமதி. எம். சூரியகலா அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| வ.எண். | பணிகள் விபரம் |
|---|---|
| 1. | புதிய பேருந்து நிலையம் செல்லும் செல்லத்துரை கோழிக்கடை அருகில் மழைக்காலங்களில் மழைநீரும், கழிவு நீரும் கலந்து குளம் போல் கட்டி மாணவர்கள் பொதுமக்கள் செல்வதற்கு மிகவும் சிரப்படுகிறார்கள். அதற்கு உடனடியாக தீர்வு செய்ய வேண்டும். |
| 2 | மறவர் தெரு மாரியம்மன் கோவில் இருந்து தொடக்கப்பள்ளி வரை கழிவு நீர் வாறுகால் ஒரு சில இடங்களில் சேதாரம் அடைந்து உள்ளது. அதை சரி செய்ய வேண்டும். வார்டு முழுவதும் வாறுகால் மூடி அமைத்து தர வேண்டுதல். |
| 3 | முஸ்லீம் பஜார், இந்து பஜார், கிருஷ்ணாபுரம் ஆகிய இடங்களில் நகராட்சிக்குட்பட்ட நீர்மாலை கிணறுகளை தூர்வாறி மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும். |
| 4 | கிருஷ்ணாபுரம், தட்டார்தெரு பகுதிகளில் பொது குழாய் அமைத்து தர வேண்டுதல். |
| 5 | கிருஷ்ணாபுரத்தில் உள்ள நகராட்சி சமுதாய கூடம் சேதாரம் அடைந்து பயன்பாடு இல்லாமல் இருக்கிறது. மறவர் தெரு, தட்டார் தெரு பொதுமக்கள் பயன்பெறும் வகையில் புதிய சமுதாய கூடம் அமைத்து தர வேண்டுதல். |
| 6 | தொடக்கப்பள்ளி அருகே சேதம் அடைந்த வாறுகாலை உயர்த்தி மூடி அமைத்து தர வேண்டுதல் |
| | **4-வது வார்டு குழு மற்றும் வார்டு சபா கூட்டத்தில் பொதுமக்களின் கோரிக்கை** |
| 1. | கிருஷ்ணாபுரம் சமுதாயக்கூடம் பராமரிப்பு செய்ய வேண்டும். குடிநீர் மற்றும் கழிப்பறை கழிவுநீர் வசதி, மெயின்ரோடு, காய்கறி கடை அருகில் மழைநீர் அதிகமாக தேங்கும் நிலையில் அதனை சரிசெ<br>ய்து தரக் கோருதல். மெயின்ரோடு வாறுகால் அடைப்புகள் சரிசெய்ய கோருதல். பழைய கிணறுகள் சரிசெய்யக் கோருதல். |

| | |
|---|---|
| 2. | பேருந்துநிலையம் அங்கன்வாடியினை இடித்து புதிதாக கட்டித் தரவேண்டும். இந்துபஜார் கிணறு தூர்வாரி சுத்தம் செய்துதர வேண்டும். ஹைமாஸ் லைட் சரி செய்து தரவேண்டும். கிழக்குநாடார் தெரு பொதுகுழாய் அமைத்து தரவேண்டும். வாறுகால்கள் சுத்தம் செய்து மூடிகள் அமைத்து தர வேண்டும். மீன்மார்க்கெட் மிகவும் பழுதடைந்துள்ளது. அதனை அதனை சரி செய்து தரக் கோருதல். குழாய் பைப்புகள் தரமானதாக அமைக்க வேண்டும். |
| 3 | நகராட்சிக்குட்பட்ட 3 சென்ட் இடத்தில் அனைத்து சமுதாய மக்களுக்கும் ஏதேனும் ஒன்று அமைக்கப்பட வேண்டும். கொசுமருந்து அடிக்க வேண்டும். குப்பைகள் தினசரி சுத்தம் செய்ய வேண்டும் |
| 4 | ஆடறுத்தான் தெரு பழைய பைப்புகள் மாற்றம் செய்து புதிதாக அமைத்து தர கோருதல் |
| 5 | இந்து பஜார் பகுதியில் கழிப்பறை வசதி அமைக்க கோருதல் |

**V) கீழக்கரை நகர்மன்ற 5-வது வார்டு உறுப்பினர் திருமதி. எஸ். காயத்ரி அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| **வ.எண்.** | **பணிகள் விபரம்** |
|---|---|
| 1. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5 சமுதாய கூடம், அண்ணாநகர் கோயில் பகுதிகளில் குப்பைகளை கொட்டும் இடத்தில் வேலை அமைத்து தர கோருதல் |
| 2 | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5 அண்ணாநகர் முதல் தெருவில் வாறுகால் சமப்படுத்துதல். |
| 3 | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5, முத்துச்சாமிபுரத்தில் இருக்கும் கழிப்பறையில் கதவுகள் அமைத்து கழிவுகளை நீக்கி தருமாறு கோருதல். |

| | **5-வது வார்டு குழு மற்றும் வார்டு சபா கூட்டத்தில் பொதுமக்களின் கோரிக்கை** |
|---|---|
| 1. | வார்டு பகுதிக்குள் தெருவிளக்குகள் எரிய வைக்க கோருதல் |
| 2. | முத்துச்சாமிபுரம் குளம் மாதந்தோறும் சுத்தம் செய்து தரக் கோருதல். |
| 3 | முத்துச்சாமிபுரம் சமுதாயக்கூடம் அருகில் குப்பைத் தொட்டியினை நீக்கி சுத்தம் செய்து தரக் கோருதல் |
| 4 | சாலையில் வேகத்தடைகள் அமைத்து தரக் கோருதல். கோவில் மற்றும் பள்ளி அருகாமையில் |
| 5 | முத்துச்சாமிபுரம் 1-வது சந்து பகுதியில் பாக்ஸ் உயரமாக உள்ளது. அதனை மட்டப்படுத்தி தரக் கோருதல். |
| 6 | பொதுகுடிநீர் குழாய் அமைத்து தரக் கோருதல். கோவில் அடுத்து கால்வாய் சரிசெய்து தரக் கோருதல். அண்ணாநகர் மற்றும் முத்துச்சாமிபுரம் கோவில் அருகில் பொதுகுழாய் அமைத்து தரக் கோருதல். |
| 7 | வாரந்தோறும் கொசுமருந்து அடிக்க வேண்டும். பிளிச்சிங் பவுடர் போட வேண்டும். |
| 8 | தூய்மை பணியாளர் குடியிருப்பு பகுதியில் புதிய அரசு பள்ளி அமைக் க வேண்டும் |
| 9 | முத்துச்சாமிபுரம் கழிவுநீர் பைப்லைன் பணி சரியாக பார்க்கப்பட வேண்டும். |

**VI) கீழக்கரை நகர்மன்ற 6-வது வார்டு உறுப்பினர் திருமதி. பைரோஸ் பாத்திமா அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| வ.எண். | பணிகள் விபரம் |
|---|---|
| 1. | இந்நகராட்சிக்குட்பட்ட 6 வது வார்டில் தொழுகைப்பள்ளி அருகில் பேவர்பிளாக்கல் பதிக்கும் வேலை நடந்து கொண்டிருக்கிறது, சுற்றி சுமார் 20க்கும் மேற்பட்ட வீடுகள் வசித்து வருகிறார்கள், அதன் அருகில் 30 அடி நீளமும் 45 அடி அகலமும் இருக்கிறது பேவர்கல் பதிக்காமல் உள்ளது. மழை காலமாக இருப்பதால் மழை நீர் இங்கு வந்து தங்கி சேறாகி விடுகிறது இதனால் சுகாதார கேடு விளைவிக்கும் இதை மறு ஆய்வு செய்து அதற்கும் பேவர் பிளாக் கல் புதைத்து தரும்படி வார்டு சார்பாகவும் என் வார்டு மக்களின் சார்பாகவும் கேட்டல். |

| | <u>6-வது வார்டு குழு மற்றும் வார்டு சபா கூட்டத்தில் பொதுமக்களின் கோரிக்கை</u> |
|---|---|
| 1. | சாலையில் போக்குவரத்திற்கு இடையூறாக பழுதடைந்துள்ள மின்கம்பத்தை மாற்ற கோரியது. |
| 2. | நகர்பகுதிகளில் சாலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற கோரியது. |
| 3 | பொது இடங்களில் குப்பைகளை கொட்டுபவர்களிடம் அபராதம் விதிக்க கோரியது. |
| 4 | குடியிருப்புகளில் அலைபேசி எண்ணை கேட்பதை தவிர்க்க கோரியது |
| 5 | சொத்துவரி சீராய்வினை மறு பரிசீலினை செய்ய கோரியது |
| 6 | தெருக்களில் பேவர்பிளாக் சாலைகளை தரமாக அமைத்து தர கோரியது |
| 7 | பட்டாணி அப்பா தர்ஹா செல்லும் வழியில் கழிவுநீர் வெளியேறும் வகையில் சரி செய்து தர கோரியது. |
| 8 | கிழக்குத்தெரு பள்ளியின் அருகில் வேகத்தடை அமைத்து தர கோரியது |

**VII) கீழக்கரை நகர்மன்ற 7-வது வார்டு உறுப்பினர் திரு. செய்யது மீரான் அலி அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| | <u>7-வது வார்டு குழு மற்றும் வார்டு சபா கூட்டத்தில் பொதுமக்களின் கோரிக்கை</u> |
|---|---|
| 1. | முகைதீனியா பள்ளி அருகில் கழிவுநீர் வெளியேறுவதை சரி செய்ய கோரியது |
| 2 | வார்டுக்குட்பட்ட பகுதிகள் முழுவதும் குடிநீர் குழாய் வசதி செய்து தர கோரியது. |
| 3 | வார்டு தெருக்களில் வரும் தூய்மை பணியாளர்கள் குப்பைகளை சரிவர வாங்குவதில்லை. அவற்றை சரி செய்ய கோரியது. துப்புரவு செய்ய வரும் பணியாளர்களின் பெயர்கள்/தொலைபேசி அகியவை நகர்மன்ற உறுப்பினர்களிடம் கொடுக்க கோருதல். துப்புரவு செய்ய வரும் தூய்மை பணியாளர்கள் தெருப்பகுதியில் உள்ள மக்களிடம் மரியாதை குறைவாக பேசுவதை சரி செய்து தர கோருதல். |
| 4 | தெருக்களில் வாரம் ஒருமுறை கொசு மருந்துகள் அடிக்கக்கோருதல். |
| 5 | நூலகம் அமைத்து தர கோருதல். |
| 6 | அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்து தர கோருதல். அதற்கான இடம் வடக்குத்தெரு பகுதியில் அமைந்துள்ள அரசு பொது இடத்தில் அமைத்து தர கோருதல். |
| 7 | வடக்குத்தெரு மணல்மேடு பகுதியில் சிறிய மினிமாஸ் விளக்கு அமைத்து தர கோருதல். மணல்மேடு சிறிய கேட் எதிரில் உள்ள பகுதிகளில் 300 வீடுகளில் கழிவு நீர் வெளியே செல்வதற்கு அப்பகுதில் கழிவுநீர் வாறுகால் அமைத்து தர கோருதல் |
| 8 | ரூபி கார்டன் பகுதிகளில் மின்கம்பங்கள் அமைத்து தர கோருதல். ரூபி கார்டன் அருகில் கருவேலமரங்கள் அதிகம் இருப்பதால் அவற்றை அகற்ற கோரியது.<br>ரூபி கார்டனில் பூங்கா அமைத்து தர கோரியது. |

| | |
|---|---|
| 9 | வடக்குத்தெரு மணல்மேல் பகுதியில் சிசிடிவி கேமரா அமைத்து தர கோரியது. மணல்மேட்டில் அமைத்துள்ள பெண்கள் தொழுகை பள்ளியின் அருகில் மின்விளக்கு அமைத்து தர கோரியது. |
| 10 | தெருக்களில் இரவு நேரங்களில் தெருநாய்களின் தொந்தரவு அதிகமாக இருப்பதால் அவற்றை பிடித்து அப்புறப்படுத்த கோருதல். |
| 11 | நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வீடுகள் கட்டுமானப்பணிகளுக்கு தேவையான கற்கள், மணல் இதர கழிவுகளை சாலையோரம் கொட்டி விடுகிறார்கள் அவற்றால் போக்குவரத்துக்கு இடையூராக உள்ளது. அவ்வாறு செய்பவர்கள் மீது அபராதம் விதிக்க கோரியது. |
| 12 | வடக்குத்தெரு பகுதிகளில் கழிவுநீர் வாறுகால்கள் அமைத்து தர கோருதல். |
| 13 | வடக்குத்தெரு பகுதிகள் முழுவதும் தார்சாலை அமைத்து தர கோருதல். |
| 14 | வடக்குத்தெரு பகுதிகளில் கழிவுநீர் வாறுகால்கள் அமைத்து தர கோருதல் |
| 15 | காலா முடுக்கு பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் கழிவுநீர் வடிகால் அமைத்து தர கோருதல் |
| 16 | மாரியம்மன் கோவில் எதிரில் உள்ள கிணற்றினை தூர் வாரி தர கோருதல். |
| 17 | வடக்குத்தெரு புதிதாக கட்டப்பட்டுவரும் தவ்ஹீத் பள்ளி அருகில் குப்பை கொட்டாமல் இருக்க நகர் நிர்வாகம் வழிவகை செய்ய கோருதல். மீறுபவர்கள் மீது அபராதம் விதிக்க வேண்டும். |
| 18 | நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகள் முழுவதும் குற்றங்களை தடுக்க காவலர்கள் இரவு நேரங்களில் ரோந்துக்கு ஏற்பாடு செய்ய தர கோருதல். |
| 19 | காலா முடுக்கு பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் கழிவுநீர் வடிகால் அமைத்து தர கோருதல். |
| 20 | வீட்டு வரி செலுத்த வார்டு வரையறை குழப்பமாக உள்ள காரணத்தினால் வார்டு மறுசீரமைப்பு செய்து தர கோருதல். |
| 21 | வடக்குத்தெரு ஜமாத்திற்கு உட்பட்ட மையவாடியில் தார் சாலை அமைத்தும் மினிமாஸ் விளக்கு அமைத்து தர கோருதல். |
| 22 | வடக்குத்தெருவில் அமைத்துள்ள குடிநீர் தேக்கத்தொட்டி பழுதடைந்துள்ளதால் புதிய குடிநீர் தேக்கத்தொட்டி அமைத்து தர கோருதல். |
| 23 | முஹம்மது சாஜிதா பானு அவர்களின் வீட்டு வரி குறைப்பு செய்து தர கோருதல் |
| 24 | சலவை தொழிலாளர்கள் காலம் காலமாக இறுதி சடங்குகள் செய்ய நீர்மாலை எடுக்கும் கிணறு தூர்வாரி செய்து தர கோருதல். |

**VIII) கீழக்கரை நகர்மன்ற 8-வது வார்டு உறுப்பினர் திரு.எம்.எம்.கே. முகம்மது காசிம் மரைக்கார் அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| வ.எண். | பணிகள் விபரம் |
|---|---|
| 1. | கீழக்கரை நகராட்சியில் பணிபுரியும் ஆணையாளரும் மற்ற அதிகாரிகளும் தங்கள் பணிகளை முடித்து கொண்டு வெளியூரில் இருக்கக்கூடிய தமது இல்லங்களுக்கு தினசரி சென்று வருகின்றனர். இதனால் அவர்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகின்றனர். ஆகவே அவர்கள் பணிபுரியும் இடத்திலேயே தங்குவதற்கு ஏதுவாக கீழக்கரையில் தங்கும் விடுதி (Staff Quarters) கட்டி கொடுத்து உதவுமாறும், அதற்கான இடத்தை நமதூர் செல்வந்தர்களிடம் கேட்டு வாங்கி கட்டிக் கொடுக்குமாறும் கோருதல். |

| | **8-வது வார்டு குழு மற்றும் வார்டு சபா கூட்டத்தில் பொதுமக்களின் கோரிக்கை** |
|---|---|
| 1. | கீழக்கரை தெற்குத்தெரு இஸ்லாமியா மெட்ரிக் பள்ளி எதிரில் உள்ள சந்து பாதையில் இடியும் தருவாயில் உள்ள கட்டிடத்தினை அப்புறப்படுத்தக் கோரியது. |
| 2. | இஸ்லாமியா மெட்ரிக் பள்ளி எதிரில் சாலையில் தேங்கும் மழைநீரை உடன் |

| | |
|---|---|
| | அப்புறப்படுத்த கோரியது மற்றும் மழைநீர் தேங்காதவாறு நடவடிக்கை எடுக்க கோரியது |
| 3 | தெற்கு தெரு பள்ளிவாசல் சந்து பகுதியில் மின் விளக்குகளை பழுது நீக்கம் செய்து எரிய வைக்க கோரியது. |

**IX) கீழக்கரை நகர்மன்ற 9வது வார்டு உறுப்பினர் திரு.மு. நசீருதீன் அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| | **9-வது வார்டு குழு மற்றும் வார்டு சபா கூட்டத்தில் பொதுமக்களின் கோரிக்கை** |
|---|---|
| 1. | கொசுமருந்து தெளிப்பதை சீராக நடைமுறைப்படுத்துவது. வார வாரம் கொசுமருந்து தெளிப்பதை நடைமுறைப்படுத்த கோரியது. |
| 2. | நூலகம் அமைத்து தர கோரியது. |
| 3 | ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க இடம் ஒதுக்கீடு செய்யக் கோருதல் |
| 4 | தார்ச்சாலையில் வேகத்தடைகளில் பெயிண்ட் அடித்து பராமரிக்க கோரியது. |
| 5 | வடக்குத் தெரு பகுதியில் CCTV அமைக்க நடவடிக்கை எடுக்க கோரியது |
| 6 | குப்பை சேகரம் செய்யும் பணியாளர்கள் முறையாக பணியாற்ற அறிவுரை வழங்க கோரியது |
| 7 | வடக்குத்தெரு தைக்கா பின்புறம் சாக்கடை நீர் வழிந்து குடியிருப்பு பகுதியில் சுகாதார கேடாக உள்ளதால் புதிய வாறுகால் பைப்லைன் அமைத்து தரும்படி கோரியது. |

**X) கீழக்கரை நகர்மன்ற 10வது வார்டு உறுப்பினர் திருமதி.தெ.பவித்ரா அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| | **10-வது வார்டு குழு மற்றும் வார்டு சபா கூட்டத்தில் பொதுமக்களின் கோரிக்கை** |
|---|---|
| 1. | 10 வது வார்டு பேவர்கல் அமைக்க கோருதல். |
| 2. | தெருவிளக்கு அமைக்க கோருதல். |
| 3 | குப்பை தொட்டி வைக்க கோருதல் |
| 4 | பெரியகாடு பகுதியில் தெரு விளக்கு அமைக்க கோருதல். |
| 5 | 10 வது வார்டுக்கு வேகத்தடைகள் அமைக்க கோருதல். |
| 6 | திரு.செய்யது இஸ்மாயில் என்பவரிடமிருந்து கோரிக்கை மனு பெறப்பட்டது. |

**XI) கீழக்கரை நகர்மன்ற 11வது வார்டு உறுப்பினர் திருமதி.பை.செஹனாஸ் ஆபிதா அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| | **11-வது வார்டு குழு மற்றும் வார்டு சபா கூட்டத்தில் பொதுமக்களின் கோரிக்கை** |
|---|---|
| 1. | 11 வது வார்டில் மறுவரையறையில் குளறுபடிகள் சரி செய்ய கோருதல். |
| 2. | நகராட்சி வண்டியில் குப்பைகள் எடுத்து செல்லும் போது வலை போட கோருதல். |
| 3 | கஸ்டம்ஸ் ரோடு, மூர் டிராவல்ஸ் , லெப்பை கடை ஆகிய பகுதிகளில் 2 எண்ணம் வேகத்தடை போடப்பட்டதில் பெயிண்ட் அடித்து தெளிவாக காட்ட வேண்டும் |
| 4 | எஸ்.என்.தெருவில் அப்பாஸ் இப்ராஹிம் என்பவர் கழிவு நீர் தொட்டிகளை (மூன்று அல்லது ஆறு மாதத்திற்கு ஒரு முறை) சுத்தம் செய்ய வேண்டும் என கோரிக்கை |
| 5 | மஹ்துமியா பள்ளி நுழைவாயில் தொட்டியின் உயரம் சரி செய்ய வேண்டும் என கோருதல் |

| | |
|---|---|
| 6 | காவேரி குடிநீர் சரியாக வரவில்லை அதனை நடவடிக்கை எடுக்க வேண்டும். சில இடங்களில் குழாய் வைக்க வேண்டும் என கோருதல். |
| 7 | சுல்த்தான் அபு சாலிஹா செட் பக்கத்தில் குப்பைகள் அகற்றப்பட வேண்டும். அங்கு கண்காணிப்பு கேமரா அமைக்கப்பட வேண்டும் |
| 8 | மீரான் பாதுஷா என்பவர் சுகாதாரம் உரிய முறையில் வழங்க கோருதல். |
| 9 | திரு. பி.எச்.நிஜாம், 8/167 சங்குளிக்காரத்தெரு, கீழக்கரை என்பவரிடமிருந்து கோரிக்கை மனு பெறப்பட்டது. |
| 10 | திருமதி. முர்ஷிதா ஷிரின், 8/34 ஆடறுத்தான் தெரு, கீழக்கரை என்பவரிடமிருந்து கோரிக்கை மனு பெறப்பட்டது |
| 11 | திரு.க. நிசார் அகமது, 8/24 ஆடறுத்தான் தெரு, கீழக்கரை என்பவரிடமிருந்து கோரிக்கை மனு பெறப்பட்டது |
| 12 | 11 வது வார்டு பகுதி மக்களுக்கு பட்டா எடுத்து தர வேண்டுதல் |
| 13 | 11 வது வார்டில் கழிவுநீர் அடைப்பு ஏற்பட்டதை சரி செய்து தர வேண்டுதல் |
| 14 | 11 வது வார்டில் கழிவுநீர் கால்வாய் மூடிகள் அமைக்க கோருதல் |
| 15 | அப்பகுதியில் குப்பைகளை அகற்ற கோருதல் |
| 16 | முதல்வர் அவர்களை இந்த திட்டத்திற்கு நன்றி அறிவித்தல் |
| 17 | பூங்கா அமைக்க கோருதல் |
| 18 | மின் கம்பங்கள் (8/11, 9/13) மாற்றி அமைக்க கோருதல் |
| 19 | பழைய கொத்துவாப்பள்ளி பின்புறம் லைன்களை சரி செய்ய கோருதல் |
| 20 | சேகர் கடை முதல் கிதிர் மாமா வீடு வரை மஹ்துமியா பள்ளி சாலையில் சிமெண்ட் சாலை சேதமடைந்ததை சரி செய்ய கோருதல் |

**XII) கீழக்கரை நகர்மன்ற 12வது வார்டு உறுப்பினர் திருமதி.ஜ. உம்மு சல்மா பீவி அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| | <u>12-வது வார்டு குழு மற்றும் வார்டு சபா கூட்டத்தில் பொதுமக்களின் கோரிக்கை</u> |
|---|---|
| 1. | BH Bazar குண்டும் குழியுமாக உள்ளது அதனை சரி செய்ய வேண்டும் என கோரிக்கை. |
| 2. | அப்பகுதியில் கொசு மருந்து அடிக்க வேண்டும் |
| 3 | பீர்னாவெட்டை மழைநீர் தேங்கியுள்ளதை அகற்றப்பட வேண்டும் |
| 4 | காவேரி குடிநீர் குழாய் வழங்க வேண்டும் என கோரிக்கை |
| 5 | கால்வாய்கள் பழுதடைந்துள்ளதை சரி செய்ய வேண்டும் |
| 6 | 12 வது வார்டு தெரு விளக்குகளை சரி செய்ய வேண்டும் |
| 7 | கட்டாலிம்சா தெற்கு தெரு குப்பைகள் அகற்ற வேண்டும். பைப் மூடிகள் சரி செய்ய வேண்டும் |
| 8 | பைத்துமால், நடுத்தெரு பகுதிகளில் EB வயர்கள் தொங்கப்படுகிறது அதனை சரி செய்ய வேண்டி கோரிக்கை. |
| 9 | BH Bazar முஸ்தபா கறிக்கடை சந்து சாக்கடை அகற்றப்பட வேண்டும் |
| 10 | BH Bazar முத்தலிபு கறிகடை வாறுகால் அமைக்க வேண்டும் |
| 11 | குடிநீர், தெருவிளக்கு, பேவர் பிளாக் போன்ற பணிகளை முடித்தவுடன் ஒப்பந்ததாரருக்கு பணம் வழங்க வேண்டும் |
| 12 | EB லைன்க்கு உயரம் உயர்த்த வேண்டும் |
| 13 | வேகத்தடை சரி செய்ய வேண்டும் என கோரிக்கை |

| | |
|---|---|
| 14 | சொக்க நாதர் கோவில் தெருவில் உள்ள கால்வாயை சரி செய்ய வேண்டும் |
| 15 | 22 வது போஸ்ட் பெத்தமால் நடுத்தெரு தெருவிளக்கு சரி செய்ய வேண்டும் |
| 16 | நடுத்தெரு பகுதியில் மழைநீரை சீர்மைப்பு செய்ய வேண்டும் |
| 17 | ரேசன் கடைகளில் அளவுகள் சரி செய்ய கண்காணிக்க வேண்டும் |

**XIII) கீழக்கரை நகர்மன்ற 13வது வார்டு உறுப்பினர் திருமதி. செ. தாஜின் அலிமா அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| | <u>13-வது வார்டு குழு மற்றும் வார்டு சபா கூட்டத்தில் பொதுமக்களின் கோரிக்கை</u> |
|---|---|
| 1. | மின்கட்டண அலுவலகம் கீழக்கரை நகருக்குள் வர வேண்டும் |
| 2 | போக்குவரத்து காவல் அலுவலகம், கீழக்கரை நகருக்குள் வர வேண்டும் |
| 3 | வள்ளல் சீதக்காதி சாலை 4 வேகத்தடைகள் போட வேண்டும் |
| 4 | ஈசா தண்டையல் ரோடு பகுதியில் தினசரி குப்பைகள் எடுக்க வேண்டும் |
| 5 | என்.எம்.டி. தெரு பகுதியில் கட்டுமான கழிவுகள் எடுத்து அகற்ற வேண்டும். கொசுமருந்து அடிக்க வேண்டும் |
| 6 | மேலத்தெரு, அப்பா தோட்டம் பேவர்கல் அமைக்க வேண்டும் |
| 7 | மாலாங்குண்டு வழியாக ஹமீதியா பள்ளி அடைக்கப்பட்டுள்ளது. பாதை வழங்க வேண்டும். |
| 8 | 18/31 தெருவிளக்கு சரி செய்யப்பட வேண்டும் |
| 9 | எஸ்.பி.எம். தெரு பகுதியில் காவேரி கூட்டு குடிநீர் இணைப்பு வழங்க வேண்டும் |
| 10 | உறுப்பினர் குடும்பத்திலிருந்து 3 பகுதி சபா உறுப்பினர்கள் உள்ளனர். நிவர்த்தி செய்து மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| 11 | பேருந்துநிலையத்தில் நேரம் மணிகாட்டி அமைக்க வேண்டும் |

**XIV)கீழக்கரை நகர்மன்ற 14வது வார்டு உறுப்பினர் திரு.கா. முகம்மது ஹாஜா சுஜபு அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| | <u>14-வது வார்டு குழு மற்றும் வார்டு சபா கூட்டத்தில் பொதுமக்களின் கோரிக்கை</u> |
|---|---|
| 1. | வள்ளல் சீதக்காதி சாலையில் போக்குவரத்து நெரிசல் சரி செய்ய வேண்டி கோரிக்கை. பேருந்து நீடித்தல் மற்றும் TNSTC |
| 2 | ஹமீதியா மேல்நிலைப்பள்ளி வழி திறக்க வேண்டும் என கோரிக்கை. |
| 3 | 1965 ல் சுகாதார நவீன கழிப்பிடமாக உள்ளதை இன்று உடற்பயிற்சி கூடமாக மாற்றினார்கள். அஸ்வான் பராமரிப்பிற்கு நடைமுறைப்படுத்தி தந்தால் எவ்வித சமூக விரோத செயல்கள் நடக்காமல் அதிக கவனத்துடன் கண்காணிப்படும் என கோரிக்கை |
| 4 | சொக்கநாதர் கோவில் தெரு பகுதியில் மழைநீர் தேங்கியுள்ளதை அகற்றப்பட வேண்டும். என கோரிக்கை. |
| 5 | ஹமீதியா பெண்கள் மேல் நிலைப்பள்ளி பெண்கள் செல்லும் வழியில் மோட்டார் வாகன நெரிசல் ஏற்படுகிறது அதனை சரி செய்ய கோருதல் |
| 6 | முதல்வரின் மருத்துவ காப்பீட்டுத் திட்டத்திற்கு முறைப்படி சரியான ஆவணங்கள் கொடுத்தும் இது வரை காப்பீட்டு அட்டை கிடைக்கவில்லை இதனால் கீழக்கரையில் நிரந்தரமாக காப்பீட்டுத் திட்டம் செயல் படுத்த வேண்டும் |

| | |
|---|---|
| 7 | பள்ளி செல்லும் வழியிலும் தொழுகைப் பள்ளி அருகில் வேகத்தடை அமைக்க வேண்டி கோரிக்கை |
| 8 | அகமது தெரு மற்றும் சொக்கநாதர் தெரு கோவில் தெருவில் உள்ள குப்பைகளை அகற்றப்பட வேண்டும் மற்றும் சாலை மற்றும் தெரு விளக்குகள் அமைத்து தர கோரிக்கை |
| 9 | காவேரி குடிநீர் குழாய்கள் இன்னும் சில இடங்களில் அதிகப்படுத்தி தருமாறு கோரிக்கை |
| 10 | வளர்ச்சிப்பாதை மாலாங்குண்டிற்கும் BSA ரஹ்மான் சாலைக்கும் இடையே இணைப்புச்சாலை அமைத்து இப்பகுதி மக்கள் சிரமமின்றி சென்று வர உதவ வேண்டும் என கோரிக்கை |
| 11 | 15/123- 5/48 ல் உள்ள தர்ஹா வார்டு எண்ணை கணினியில் ஏற்றுவதற்கு பரிந்துரை செய்ய வேண்டும். தேர்தலின் போது வார்டுகள் 14 வது வார்டு 13 வது வார்டாகவும் 15 வது வார்டு 14 வது வார்டாகவும் மாறி மாறி குழப்பமாக உள்ளது, அதனை சரி செய்ய ஆவணம் செய்யவும் |
| 12 | மாலாங்குண்டிலிருந்து ஹமீதியா ஆண்கள் மேல்நிலைப்பள்ளி செல்லும் சாலை ரியல் எஸ்டேட்தாரர்களால் அடைக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் கூடுதலாக 2 கி.மீ சுற்றிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. மாணவர்கள் துயரம் நீக்க உதவிட வேண்டும் என கோரிக்கை |
| 13 | ஊரில் போக்கு வரத்து நெரிசல் அதிகரிப்பதால் டிராஃபிக் போலிஸ் அலுவலகம் திறக்க அரசிடம் கோரிக்கை. |
| 14 | பேருந்து நிலைய மின் கட்டண அலுவலகம் மீண்டும் செயல்பட உதவ வேண்டும் |
| 15 | நகர பேருந்துகள் கடற்கரை வரை வந்து செல்கின்றன. சில பேருந்துகள் காலை 9.00 பகல் 1.00 மாலை 5.00 பேருந்துகள் PSM மருத்துவமனை வரை நீட்டிக்க வகை செய்ய வேண்டும் |
| 16 | ஊருக்குள் மினி பஸ் போக்குவரத்து தொடங்க உதவ வேண்டும் |
| 17 | அகமது தெரு பகுதியில் மழை காலங்களாக இருந்தாலும் சரி மற்ற காலங்களாக இருந்தாலும் சரி தாழ்வானப் பகுதிகளில் அதிக தண்ணீர் தேங்குவதால் அதிக சுகாதார குறைபாடு ஏற்பட்டு கொசுக்கள் இதர விஷ சந்துக்கள் தொல்லைகள் அதிகமாக இருப்பதால், போர்க்கால அடிப்படையில் எங்களுக்கு இந்நதப் பகுதியில் தண்ணீர் வெளியில் செல்வதற்கான பைப் லைன்கள் அமைத்து தருமாறு கோரிக்கை. |
| 18 | N.M.T தெரு சேர்மன் சதக் சாலை அருகில் மழை பெய்தால் தண்ணீர் அதகிமாக தேங்கி நிற்கிறது இதனால் நோய் பரவுகிறது அதனை சரி செய்ய கோரியது |
| 19 | N.M.T தெரு, அகமது தெரு பள்ளி பள்ளமாக உள்ளதால் வாகனங்கள் அதிவேகமாக சென்று கொண்டு இருப்பதால் வேகத்தடைகள் அமைத்து தர கோரிக்கை |
| 20 | சாலை தெருவில் உள்ள கோவில் பக்கம் உள்ள அனைத்து சந்துகளும் மழைக்காலங்களில் குளம் போல் தேங்கி இரண்டு மூன்று நாட்கள் ஆகிறது. தண்ணீர் வற்றுவதற்கு முன்னால் கொசுக்கள் மூலம் இன்னும் பல நோய்கள் ஏற்படுகிறது ஆகையால் இதனை நடவடிக்கை எடுக்கவும். |
| 21 | பழைய டெலிபோன் எக்சேஞ்ச் இருந்து ஓடக்கரைப் பள்ளி சாலையில் வரும் பாதை முழுவதும் படு மோசமாக இருக்கிறது மழை காலங்களில் தண்ணீர் தேங்கி இருக்கிறது ஆகையால் இதனை சரி செய்ய கோரிக்கை |
| 22 | கோக்கா அகமது தெரு ரோடு 17/11 போஸ்டின் நம்பர் எதிர் சந்தில் உள்ள 3 போல்களுக்கு புது மின் விளக்கு அமைத்து தரக் கோருதல் |
| 23 | சதக் சாலை அஞ்சலகத்தின் கிழக்கு பக்கம் ரோட்டில் உள்ள பள்ளி செல்லும் வழியில் பேவர் பிளாக் ரோடு போடபப்ட்டுள்ளது. அதில் மழைநீருடன் கழிவுநீர் சேர்ந்து தேங்கியிருப்பதால் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் கோரிக்கை |

**XV)கீழக்கரை நகர்மன்ற 15வது வார்டு உறுப்பினர் திருமதி.அ. டல்சி அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| | **15-வது வார்டு குழு மற்றும் வார்டு சபா கூட்டத்தில் பொதுமக்களின் கோரிக்கை** |
|---|---|
| 1. | கடற்கரை பகுதியில் நடக்கக் கூடிய தவறான செயல்களை காவல் துறை மூலம் தடுக்க கோரிக்கை |
| 2 | பழைய பேருந்து நிலையத்தில் உயர்மின் கோபுர விளக்கு அமைத்து தர கோரிக்கை |
| 3 | பன்னாட்டார் தெருவில் குப்பைகளை அகற்றுதல் மற்றும் குப்பை தொட்டி அமைக்க கோரிக்கை |
| 4 | கடற்கடை அருகே உள்ள பேருந்து நிலையத்தில் வரும் பேருந்து உடனே கிளம்பாமல் சிறிது நேரம் காத்திருந்து பயணிகளை ஏற்றி செல்ல கோரிக்கை |
| 5 | பன்னாட்டார் தெரு மற்றும் சங்கு வெட்டி தெருவில் வாறுகால் சரி செய்து தர கோரிக்கை |
| 6 | கடற்கரை பகுதியில் உள்ள சாலையில் கழிவுநீர் செல்லும் பைப்லைன் வைத்து கான்கிரிட் போட்டு தர கோரிக்கை |
| 7 | பன்னாட்டார் தெரு பகுதியில் குடிநீர் வசதி செய்து தர வேண்டும் மற்றும் அப்பா தோட்டத்தில் கழிவுநீர் தேங்குவதால் அதனை சரி செய்ய தருமாறு கோரிக்கை |
| 8 | பன்னாட்டார் தெரு மற்றும் சங்குவெட்டித் தெருவில் மின் கம்பம் பழுதாகி உள்ளதால் புதியதாக மின் கம்பம் அமைத்து தெரு விளக்கு அமைத்து தருமாறு கோரிக்கை |
| 9 | அப்பகுதியில் உள்ள வேகத்தடை இரவு நேரத்தில் சரியாக தெரியாததால் வெள்ளை வர்ணம் அடித்து தருமாறு கோரிக்கை |
| 10 | பொது மக்களுக்கு அயோடின் சத்து குறைவு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த கோருதல் |
| 11 | பன்னாட்டார் தெரிவில் தரமான சுவிட்ச் போர்டு வைத்து தரக் கோருதல் |
| 12 | வீட்டில் உள்ள ரோடு அருகே உடையும் நிலையில் உள்ள EB போஸ்ட் சரி பார்க்கவும். |
| 13 | கொசுக்கள் தொல்லை கொசு மருந்து அடிக்க வேண்டும் கொசு மருந்து பவுடர் போடுவதில்லை அதனை போட வேண்டும் என கோரிக்கை |
| 14 | வீட்டின் அருகே முன்னாள் நகராட்சி பொறியாளர் இருந்ததால் தினம்தோறும் பணியாளர்கள் சுத்தம் செய்தனர். இப்பொழுது குப்பை எடுக்க வருவதில்லை அதனை சரி செய்ய கோரிக்கை |
| 15 | கொசு மருந்து பவுடர் போடுவதில்லை அதனை போட வேண்டும் என கோரிக்கை |
| 16 | மின் கம்பங்களில் மரங்கள் உரசுவதால் இணைப்பு தடை ஏற்படுவது அதனை சரி செய்ய கோரிக்கை |

**XVI)கீழக்கரை நகர்மன்ற 16வது வார்டு உறுப்பினர் திருமதி. சி. ஜனுல் ஆரிபா அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| | **16-வது வார்டு குழு மற்றும் வார்டு சபா கூட்டத்தில் பொதுமக்களின் கோரிக்கை** |
|---|---|
| 1. | வார்டு எண். 16 ல் உள்ள தேவையில்லாத வேகத்தடையை அகற்றப்பட வேண்டும். |
| 2 | அப்பகுதியில் உள்ள மக்களுக்கு தெரு நாய்கள் தொந்தரவு இருப்பதால் அதனை பிடிக்க வேண்டும் என கோரிக்கை |
| 3 | துப்புரவு பணியாளர்கள் நியமனம் |
| 4 | அப்பகுதியில் தெரு விளக்கு சரி செய்ய வேண்டும் என கோரிக்கை |
| 5 | 16 வது வார்டில் உள்ள பகுதியில் கொசு மருந்து அடித்து கொள்ள வேண்டும் என கோரிக்கை |

| | |
|---|---|
| 6 | 16 வது வார்டில் கிணற்றுக்கு மருந்து அடிக்க வேண்டும் |
| 7 | பழைய பேருந்து நிலையத்தில் உயர்மின் கோபுர விளக்கு அமைத்து தர வேண்டி கோரிக்கை |
| 8 | சாலை தெரு பகுதியில் சாதிக் என்பவர் வாறுகால்களை சரி செய்து தர வேண்டி கோரிக்கை |
| 9 | முத்தலிப்பு அரிசி கடை சந்து வாறுகால் மற்றும் வேகத்தடை சரி செய்யுமாறு கோரிக்கை |
| 10 | சாலை தெரு பகுதியில் பேவர்கல் சாலை போட வேண்டும் என கோரிக்கை |
| 11 | சாலை தெரு பகுதியில் உள்ள முர்சிதா வீடு அருகில் மழைநீர் தேங்கியிருப்பதை அகற்றப்பட வேண்டும் என கோரிக்கை |
| 12 | பழைய டெலிபோன் (Exchange) கார்னர் வாறுகால் சரி செய்ய வேண்டும் என கோரிக்கை |

**XVII)கீழக்கரை நகர்மன்ற 17வது வார்டு உறுப்பினர் திருமதி.ஐ.செய்யது முகம்மது பாயாஸ்தீன் அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| | <u>17-வது வார்டு குழு மற்றும் வார்டு சபா கூட்டத்தில் பொதுமக்களின் கோரிக்கை</u> |
|---|---|
| 1. | கொத்துவாப்பள்ளி முதல் பழைய பேருந்து நிலையம் வரை வாறுகால் சரி செய்ய வேண்டும் என கோரிக்கை. |
| 2 | என்.எம்.டி. தெரு மற்றும் நடுத்தெரு பகுதிகளில் குடிநீர் அமைக்க கோருதல் |
| 3 | சோலார் லைட் அமைக்க கோருதல். |
| 4 | பழைய பேருந்து நிலையம் அருகில் உயர்மின் கோபுர மின் விளக்கு வைக்க வேண்டும் |
| 5 | ஹைட்ராலிக் வண்டி – குப்பையை அகற்றுதல் |
| 6 | வாறுகால் தோன்றுவதற்கு JCB வண்டியை வைத்து பயன்படுத்த கோருதல் |
| 7 | வாறுகால் அடைப்புகளை சரி செய்ய வேண்டும் |
| 8 | ஹைட்ராலிக் மிஷின் மூலம் அடைப்பு எடுத்து வாறுகால் சரி செய்ய வேண்டும் |
| 9 | அத்திலை தெரு பகுதியில் வாறுகால் சரி செய்ய வேண்டும் |
| 10 | ஜின்னா தெரு பகுதியில் வாறுகால் மூடி அமைக்க கோருதல் |
| 11 | பண்டகசாலை, சாலை தெரு செல்லும் வழியில் உள்ள குப்பை கொட்டும் இடத்தில் இருந்த பெட்டியை எடுத்து குறுங்காடு அமைத்தார். ஆனால் மீண்டும் சாலையில் குப்பை கொட்டுவதால் பொது மக்களுக்கு மிகுந்த சிரமத்தை ஆக்கியுள்ளது அதை நிரந்தரமாக சுகாதாரமாக அமைக்க கோரிக்கை |
| 12 | பண்டகசாலை ட்ரான்ஸ்பார்முக்கு அருகில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான 20 கோல் இடத்தில் பொது கழிவறை கட்டி சரியாக பராமரிக்காததால் பழுதாகி உள்ளது அதனை சரி செய்து தருமாறு கோரிக்கை. |
| 13 | சீதக்காதி சாலை, ஜின்னா தெரு பொதுக் கிணறு அருகில் குப்பை போடும் இடத்தில் தரையில் போடாமல் புதியதாக தொட்டி வைக்க கோருதல் |
| 14 | சீதக்காதி சாலை, கடற்கரை செல்லும் வழியில் பெட்ரோல் பங்க் அருகில் ஊரின் குப்பைகளைக் கொட்டி கலக்ஷன் பாய்ண்டாக ஆக்கி கடற்கரை சாலையை மிகுந்த நாற்றம் அடிக்க வைத்து சுகாதாரக் கேடாக ஆக்கியுள்ளார்கள். அதை சரி செய்து கடற்கரையை மக்கள் நல்ல முறையில் பயன்படுத்த வேண்டி கோரிக்கை |
| 15 | சீதக்காதி சாலையில் பல இடங்களில் கழிவுநீர் வாய்க்கால் சரியாக இல்லாமல் வாரத்தில் இரண்டு அல்லது மூன்று முறை நீர் நிரம்பி சீதக்காதி சாலையில் இருந்து கடற்கரை வரை சாக்கடை ஓடுவதை சரி செய்ய கோரிக்கை |

| | |
|---|---|
| 16 | கேமராக்கள் 11 வது வார்டில் சீதக்காதி சாலை, பண்டக சாலை மற்றும் சாலை தெருவில் முக்கியமான இடங்களில் வைத்தால் 11 வது வார்டு முழுவதும் கண்காணிக்க முடியும். ஆகையால் அதற்கு தோதாக கேமரா பொருத்த ஏற்பாடு செய்யவும் |

**XVIII)கீழக்கரை நகர்மன்ற 18வது வார்டு உறுப்பினர் திரு.சி.ஜக்கினா பேகம் அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| | **18-வது வார்டு குழு மற்றும் வார்டு சபா கூட்டத்தில் பொதுமக்களின் கோரிக்கை** |
|---|---|
| 1. | சேரான் தெருவில் மீன் கடையில் இருந்து ஐஸ் பிளான்ட் வரை வாறுகால் மூடிகள் அமைக்க கோரிக்கை |
| 2 | அப்பகுதி மக்களுக்கு தெரு விளக்கு மற்றும் உயர்மின் கோபுர விளக்கு அமைத்து தர கோரிக்கை |
| 3 | பணியக்காரத் தெருவில் கழிவுநீர் குழாய்களை வாரம் ஒரு முறை சுத்தம் செய்ய கோரிக்கை |
| 4 | பேவர் பிளாக் சாலையில் பைப்லைன் போட்ட இடங்களை சரி செய்ய கோரிக்கை |
| 5 | **கோரிக்கை சேரான் தெரு:**<br>1) காவேரி பொதுகுடிநீர் குழாய் இருந்தது அதில் சமீப காலமாக தண்ணீர் வர வில்லை அதனை சீரமைக்க கோரிக்கை.<br>2) கடற்கரை பள்ளி வாசல் தெருவில் பேவர் பிளாக் சாலையில் அடிக்கடி தண்ணீர் தேங்கியுள்ளதை சரி செய்ய கோரிக்கை.<br>3) சேரான் தெருவை சார்ந்த அப்துல் காதர் பொது மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற மனு கொடுத்துள்ளார் அதனை செய்ய கோருதல்.<br>4) 18 வது வார்டில் குடிநீர் இணைப்புகள் அமைக்க கோரிக்கை.<br>5) வாறுகால்களுக்கு மூடி அமைக்க கோரிக்கை |
| 6 | லெப்பை தெருவில் குடிநீர் பைப்லைன்கள் அமைத்து தர கோரிக்கை |
| 7 | லெப்பை தெருவில் பொது மக்களுக்கு நகராட்சி குடிநீர் வண்டி வாரம் இருமுறை விநியோகம் செய்ய வேண்டும் என கோரிக்கை |
| 8 | மீன் கடை அருகில் குப்பைகளை அகற்றி பூங்கா அமைத்து தர கோரிக்கை. மீனவர் குப்பத்தில் ஒரு வாரமாக தெருவிளக்குகள் எரியவில்லை |
| 9 | சேரான் தெருவில் 20 வீடுகளுக்கு மின்சாரம் சரியாக எரியவில்லை. மின் வாரிய ஊழியர்கள் மின் கம்பத்தில் ஏறி சரி செய்ய முடியாத நிலை உள்ளதால் மின் கம்பத்தை மாற்றி மறுசீமைத்து தரவும் புதியதாக மின் கம்பம் இணைக்க கோரிக்கை |
| 10 | தெருவிளக்கு அனைத்தும் அகற்றி விட்டு புது விளக்குகள் அமைத்து தர வேண்டும் என கோரிக்கை. |
| 11 | 18 வது வார்டில் குறிப்பிட்ட பகுதிகளில் இன்னும் பேவர் பிளாக் ரோடு சரியாக போடப்படவில்லை |
| 12 | காவேரி குடிநீர் குழாய் வசதி வேண்டி கோரிக்கை |
| 13 | டிரான்ஸ்பார்மர் பக்கத்தில் உள்ள குப்பை கொட்டும் இடத்தை சரி செய்து அங்கு மக்கள் பயன்பாட்டிற்கான சிறியதாக நடைபாதை பூங்கா ஒன்று அமைக்க வேண்டும் என கோரிக்கை |
| 14 | **கழிவுநீர் குழாய்**<br>1. மீன் கடைக்கு முன்னதாக உள்ள இரண்டாவது சந்துJunction Box க்கு போற Pipe line Damage ஆகி உள்ளது அதனை சரி செய்ய கோரிக்கை.<br>2. கலங்கரை விளக்கம் அருகே இருக்கும் சந்தில் கழிவுநீரை அடிக்கடி நகராட்சி கழிவுநீர் உறிஞ்சும் வண்டியை வைத்து சுத்தப்படுத்திகிட்டு இருக்கும் சூழ்நிலையில், வண்டி பழுதாகும் நேரத்தில் அந்த சந்து முழுவதும் கழிவுநீர் நிரம்பி திரும்பி வீட்டிற்கு வருகிறது அதனை சரி செய்ய கோரிக்கை. |

**XIX)கீழக்கரை நகர்மன்ற 19வது வார்டு உறுப்பினர் திரு.ச. சஃப்ரஸ் நவாஸ் அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| வ.எண். | பணிகள் விபரம் |
|---|---|
| 1. | கீழக்கரை நகராட்சி பெத்திரி தெருவில் சாஹிப் அப்பா தர்ஹா அருகில் பைப்லைன் அமைத்து தர கோருதல். |
| 2 | புதிதாக 2 எண்ணம் குடிநீர் பைப் அமைத்து தர கோருதல். |
| 3 | புதிதாக தெருவிளக்கு இல்லாத இடத்தில் 20 எண்ணம் தெருவிளக்கு அமைக்க கோருதல் |
| 4 | வார்டு முழுவதும் வாறுகால் மூடி அமைத்து தர கோருதல். |
| | **<u>19-வது வார்டு குழு மற்றும் வார்டு சபா கூட்டத்தில் பொதுமக்களின் கோரிக்கை</u>** |
| 1. | 19 வது வார்டு பகுதிகளில் தெருவிளக்குகள் எரியவில்லை மற்றும் குடிநீர் வரவில்லை அதனை சரி செய்ய வேண்டும் என கோரிக்கை |
| 2 | 19 வது வார்டில் உள்ள முகம்மது ரஹ்மின் ஆயிஷா என்பவர் குடிநீர் சரியாக வரவில்லை, தினசரி வருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை |
| 3 | 19 வது வார்டு பகுதியில் வாறுகால் சரி செய்ய வேண்டும் என கோரிக்கை |
| 4 | 19 வது வார்டு முழுவதும் குப்பைகளை அகற்றப்படவேண்டும் என கோரிக்கை |
| 5 | அப்பகுதியில் 9/13 உள்ள மின் கம்பத்தில் தெரு விளக்கு சரி செய்ய வேண்டும் |
| 6 | 19 வது வார்டு பகுதியில் Transformer க்கு கீழ் குப்பைகளை அகற்றப்பட வேண்டும் என கோரிக்கை |
| 7 | அப்பகுதி சாலையில் போக்குவரத்துக்கு இடையூராக உள்ள கற்களை அகற்றப்பட வேண்டும் என கோரிக்கை |
| 8 | வார்டு உறுப்பினர் வாரம் ஒரு முறை அந்த வார்டு மக்களிடம் உள்ள குறைறையை கேட்க வேண்டும் என கோரிக்கை |
| 9 | அப்பகுதியில் முபினா பேகம் என்பவர் வேகத்தடை அமைத்து தர வேண்டும் என கோரிக்கை |
| 10 | பௌசியா பேகம் என்பவர் அப்பகுதியில் தண்ணீர் குழாய் இணைத்து அடிப்படை வசதி செய்து தர வேண்டும் என கோரிக்கை |
| 11 | EB Post இடையூராக உள்ளது. அதனை சரி செய்ய வேண்டும் என கோரிக்கை. |
| 12 | அப்பகுதியில் குடிநீர் டேங்க் அமைக்க வேண்டும் என கோரிக்கை. |
| 13 | மின் விளக்குகள் சரி செய்ய வேண்டும் என கோரிக்கை |
| 14 | தெரு விளக்குகள் சரி செய்து கால்வாய் திறக்கப்பட வேண்டும் |

**XX)கீழக்கரை நகர்மன்ற 20வது வார்டு உறுப்பினர் திரு.அ.சேக் உசேன் அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| | |
|---|---|
| | **<u>20-வது வார்டு குழு மற்றும் வார்டு சபா கூட்டத்தில் பொதுமக்களின் கோரிக்கை</u>** |
| 1. | பெத்திரி தெருவில் பெரியக்காடு பகுதியில் வாறுகால் சீரமைப்பு செய்ய கோரிக்கை |
| 2 | பெரியக்காடு பகுதியில் பெத்திரி தெருவில் இரவு நேரத்தில் குப்பை எடுக்க வேண்டும் என கோரிக்கை |
| 3 | அப்பகுதி மக்களுக்கு பட்டா எடுத்து தரக் கோரிக்கை |
| 4 | அப்பகுதி மக்களுக்கு காவேரி தண்ணீர் குழாய் அமைக்க கோரிக்கை |
| 5 | அப்பகுதி சீனி ரஹ்மான் வீடு பழுதடைந்துள்ளதால் அதனை சரி செய்ய கோரிக்கை |

| | |
|---|---|
| 6 | அப்பகுதியில் ஆய்ஷத் என்பவருக்கு முதியோர் பணம் வாங்கி கொடுக்க கோரிக்கை |
| 7 | கடற்கரை பகுதியில் குப்பைகள் நிறைய உள்ளதால் அகற்றக் கோரிக்கை |
| 8 | அப்பகுதியில் காவேரி குடிநீர் வரவில்லை |
| 9 | கடற்கரை பகுதியில் உள்ள வாறுகால் வாரம் ஒரு முறை சீரமைக்க கோரிக்கை |
| 10 | மீனவர் குப்பத்தில் சமுதாயக்கூடம் அமைக்க கோரிக்கை |
| 11 | மீனவர் குப்பத்தில் ஒரு வாரமாக தெருவிளக்குகள் எரியவில்லை |
| 12 | மீனவர் குப்பம் முதல் பெத்திரி தெரு வரை உயர்மின் கோபுர விளக்கு அமைக்க கோரிக்கை |
| 13 | மீனவர் குப்பம் முதல் பெத்திரி தெரு வரை உயர்மின் கோபுர விளக்கு அமைக்க கோரிக்கை |
| 14 | மீனவர் குப்பத்தில் கழிப்பறை பழுதடைத்து உள்ளதால் அதனை இடித்து சிறுவர் பூங்கா அமைக்க கோரிக்கை |
| 15 | அப்பகுதி மக்களுக்கு பொது கிணறு சீரமைத்து தர கோரிக்கை |
| 16 | நகராட்சி குடிநீர் வண்டியை ஆய்வு செய்ய வேண்டும் |
| 17 | அப்பகுதியில் உள்ள மக்களுக்கு முக்கிய இடங்களில் கண்காணிப்பு கேமரா அமைத்து தர கோரிக்கை |
| 18 | கடற்கரையில் இருக்கும் படிகளை சரி செய்ய கோரிக்கை |
| 19 | பெத்திரி தெருவில் குப்பை தொட்டி அமைக்க கோரிக்கை |
| 20 | பெத்திரி தெருவில் புதியதாக இரண்டு அங்கன்வாடி அமைத்து தர கோரிக்கை |

**XXI)கீழக்கரை நகர்மன்ற 21வது வார்டு உறுப்பினர் திரு.சு. சித்திக் அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| வ.எண். | பணிகள் விபரம் |
|---|---|
| 1. | வார்டு மக்களின் குறைகளை நகர்மன்றத் தலைவர் அவர்களிடம் கூற வரும் போது நகர்மன்றத்தில் உள்ள பணி அறை மிகவும் சிறியதாக உள்ளதால் மிகவும் சிரமத்துடன் நகர்மன்றத் தலைவர் அவர்களை காண முடிவதால் சேர்மன் அலுவலக பணி அறையை பெரிதாக மாற்றம் செய்யுமாறு கோருதல். |
| 2. | கழிவுநீர் குழாய் அமைத்தல் |
| 3. | புதிய மின்கம்பத்தில் மின் விளக்கு அமைத்தல் |
| | **21-வது வார்டு குழு மற்றும் வார்டு சபா கூட்டத்தில் பொதுமக்களின் கோரிக்கை** |
| 1. | பட்டாணியப்பா முதல் ஆயிஷா பள்ளிவாசல் வரை மின் விளக்கு எரியவில்லை. சரிசெய்ய வேண்டி கோரிக்கை |
| 2 | பட்டாணியப்பா தெருவில் சாலை பழுதடைந்து கழிவுநீர் வெளியேறி உள்ளது |
| 3 | புதுகிழக்குத் தெருவில் இருந்து பட்டாணியப்பா ஆயிஷா பள்ளி வரை குடிநீர் குழாய் அமைத்து தர கோரிக்கை |
| 4 | பட்டாணியப்பா தெருவில் புதியதாக உள்ள உரக்கிடங்கில் வெளி மாநில தொழிலாளர்கள் இருப்பதால் பல்வேறு தொந்தரவு இருக்கிறது அதனை சரி செய்ய கோரிக்கை. அந்த பகுதியில் குப்பை அகற்றும் பணிக்கான தொழிலாளர்களை தூய்மைப்படுத்த அனுப்ப வேண்டும் மற்றும் தெருவிளக்கு அமைக்க கோரிக்கை |
| 5 | பட்டாணியப்பா தெருவில் தெரு நாய்கள்கள் தொந்தரவு இருப்பதால் அதனை பிடிக்க வேண்டும் என கோரிக்கை |

| | |
|---|---|
| 6 | குடிநீர் தண்ணீர் வண்டி மற்றும் நகராட்சி குடிநீர் வண்டி இன்று வரை வரவில்லை. (வாரந்தோறும் வரக் கோரிக்கை) பேவர் பிளாக் ரோடு மற்றும் கழிவு நீர் வாறுகால் அமைத்து தர வேண்டி கோரிக்கை |
| 7 | தொழுகைப் பள்ளிக்கு செல்லும் பெண்களுக்கு தெருவிளக்கு அமைத்து தர வேண்டும். பட்டாணியப்பா தெருவில் குப்பை உரக்கிடங்கு அமைத்து தருதல், குப்பை வாங்குவது இல்லை. மேலும் தொழுகைப் பள்ளி வரை குடிநீர் வசதி அமைத்து தர வேண்டும் என கோரிக்கை |
| 8 | புதுக்கிழக்குதெருபகுதியில் கழிவுநீர் வாறுகால்கள் அமைத்தல் குப்பையை முறையாக எடுப்பதற்கான கோரிக்கை |
| 9 | புதுக்கிழக்கு தெரு பகுதியில் தெருவிளக்குகள், கழிவுநீர் வாறுகால்கள் மற்றும் குடிநீர் வசதி அமைத்து தர கோரிக்கை |
| 10 | புதுக்கிழக்கு பகுதியில் தெருநாய்கள் தொந்தரவு இருப்பதால் பிடிக்க கோரிக்கை |

**<u>தீர்மான எண்.158</u>**

1) தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
2) வார்டு எண்.1ல் 2வது கோரிக்கை பரிசீலனை செய்து தீர்மானிக்கப்படும்.
3) வார்டு எண்.4ல் வார்டு சபா 5வது கோரிக்கை பரிசீலனை செய்து தீர்மானிக்கப்படும்.

**<u>பொருள்: 2</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.1725/2022/எம்.3, நாள். 24.02.2022 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் சுற்றிக்கை ந.கஎண்.1723/2022/பி1, நாள். 01.04.2022ல் புதிய ஈப்பு வாகனம் நிபந்தனைகளுக்குட்பட்டு ஈப்பு வாகனம் வாங்கிட கருத்துரு சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.1725/2022/எம்3, நாள். 06.05.2022-ன்படி புதிய ஈப்பு வாகனம் நகராட்சிகளில் அனுமதிக்கப்பட்ட பொலிரோ வாகனம் தற்போது கொள்முதல் செய்யப்படாமல் இருப்பின் நகர்மன்றத் தலைவருக்கு பொலிரோ வாகனத்திற்கு பதிலாக ஸ்கார்பியோ வாகனம் ரூ.16.80 இலட்சம் அரசு நிர்ணயம் செய்யப்பட்ட GEM Rate விலைக்கு மிகாமல் விதிகளுக்குட்பட்டு வாங்கிட மன்றத்தின் அனுமதிக்காக 31.05.2022 - ந் தேதி நகர்மன்ற கூட்டத்தில் வைக்கப்பட்டது. அதில் அரசு முழு மானியமாக பெற்று வாங்கப்படும் அல்லது நிதி நிலையை பொருத்து பின்னர் வாங்கப்படும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதனை தொடர்ந்து தற்போது நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அறிவுரையின்படியும் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை அவர்களின் 22.09.2022 தேதியன்று இவ்வலுவலகத்தில் நேரடி ஆய்வின் போது நகர்மன்றத் தலைவருக்கு வாகனம் உடனடியாக வாங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்தும், இந்நகர்மன்றத் தலைவருக்கு ஸ்கார்பியோ வாகனம் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.18.00 லட்சம் மட்டும் ஒதுக்கீடு செய்து இந்நகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு நகர்மன்ற தீர்மான எண்.137, நாள். 13.10.2022 ந் தேதி அங்கீகாரம் பெறப்பட்டு வாகனம் வாங்கப்பட்டுள்ளது. தற்போது வாகனப்பதிவு சான்றிதழ் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்வதற்கு கூடுதல் செலவினம் ரூ.4.00 இலட்சம் ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி

